**தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்**
**பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.**
**தலைமை இடம் - சென்னை.**

**K.சந்திரசேகரன்**
**தலைவர்**

**R.சந்திரசேகரன்.**
**பொதுச்செயலாளர்**

## சுற்றறிக்கை – 15

17-10-2016

அன்புடையீர்

வணக்கம். கடந்த சுற்றறிக்கை எண்-12, நாள்-7-9-2016-ல் தெரிவித்திருந்தபடி 23-08-2016 அன்றைய வாரிய கூட்டத்தில் வைக்கப்பட்ட பிரச்சனைகளில் மஸ்தூரிலிருந்து, கள உதவியாளர் பதவி உயர்வுக்கு மட்டும் கல்வித்தகுதி தளர்வுடன் ஒப்புதல் பெறப்பட்டு 03-09-2016 அன்று 4297 பேருக்கு பதவி உயர்வு வழங்கிட உத்திரவும் பிறப்பிக்கப்பட்டது. வட்டங்களில் தேவைப்படும் காலிப்பொறுப்புகள் இல்லையென்றாலும் சூப்பர்நியூமரி களஉதவியாளர் பதவி உயர்வும் வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மீதமுள்ள பிரச்சனைகளான, கணக்கீட்டாய்வாளர், வருவாய் மேலாளர் பதவி உயர்வுக்கு பணிக்காலத்தை தளர்த்துதல், களப்பிரிவு தொழிலாளர்களின் இருவழிப்பாதை பதவி உயர்வு சீரமைப்புக்கான ஒப்பந்தம், இளநிலை உதவியாளர் உள்முகத்தேர்வுக்கு S.S.L.C. கணக்கிலெடுப்பது, ஆகியவைகளை அடுத்த வாரியக்கூட்டத்தில் ஒப்புதல் பெற்றிடுமாறு நிர்வாகத்தை தொடர்ந்து வற்புறுத்தி வருகிறோம்.

23-09-2016 அன்று போனஸ் பேச்சு வார்த்தையின்போது சங்கங்களின் கோரிக்கையைப் பரிசீலித்து 8.33% போனஸ், 11.67% கருணைத் தொகை, மாதசம்பளம் ரூ.7000- எனக் கணக்கெடுத்து ரூ.16,800-னை இந்த ஆண்டு மகிழ்ச்சியுடன் தீபாவளிப் பண்டிகையை கொண்டாடும் வகையில் தொழிலாளர்களுக்கு 7-ந் தேதியே வழங்கிய தமிழக அரசுக்கும், மின்வாரிய நிர்வாகத்திற்கும் நமது மனமார்ந்த நன்றி.

அதேபோல் கருணைத்தொகை சென்ற ஆண்டு வழங்கியதைக் காட்டிலும் 2 மடங்கு தொகை ரூ.4000-னை 82 “ஒப்பந்தத்” தொழிலாளர்களுக்கு வழங்கியதற்கும் நமது நன்றி.

ஆனால் இந்த 82 பேரும் ஒப்பந்த தொழிலாளர்கள் அல்ல. வாரியத்தில் நேரடியாக மாதசம்பளம் பெறும் தினக்கூலித் தொழிலாளர்கள். சுருங்கச் சொன்னால் போனஸ் சட்டப்படி “தொழிலாளர்கள்” என்னும் வரையறைக்குள் வருவதால் இவர்கள் அனைவருக்கும் இதர தொழிலாளர்களைப் போல 8.33% போனஸ், 11.67% கருணைத் தொகைப் பெற்றிட உரிமை படைத்தவர்கள். சுமார் ரூ.15,000- பெறக்கூடியவர்களுக்கு ரூ.4000-மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. மீதம் ரூ.11,000- நிலுவைத் தொகையைப் பெற்றுத்தர விரைவில் நமது சங்கம் நடவடிக்கையைத் துவங்கிடவுள்ளது.

புதிய அலுவலகங்களுக்கு பகுதிநேரத் துப்புறவுத் தொழிலாளர்களை நியமிப்பது, நிறுத்தப்பட்ட பகுதிநேரத் துப்புறவுத் தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை கொடுப்பது, கால முறை சம்பளம் வழங்கியதை நிறுத்தி, நிலுவைத் தொகையினைத் திரும்பப் பிடித்து, மாதம் ரூ.1000- தொகுப்பூதியத்திற்கு குறைத்ததை திருத்துவது, பிடித்தம் செய்யப்பட்டத் தொகையினை திரும்ப வழங்குவது என்ற, நமது கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

9-10-2016 முதல் 12-10-2016 வரை ஜப்பான் நாட்டில் ஃபுகுஓகா நகரில் நடைபெற்ற, PSI ஆசிய பசிபிக் நாடுகளின் தொழிற் சங்கத் தலைவர்கள் மாநாட்டில், அழைப்பின் பேரில் நமது சங்கப் பிரதிநிதியாகப் பொதுச்செயலாளர் அவர்கள் கலந்து

கொண்டார். 1.இந்தியா, 2.வங்காளதேசம், 3.பாகிஸ்தான், 4.நேபால், 5.ஸ்ரீலங்கா, 6.இந்தோனேசியா, 7.தாய்லாந்து, 8.ஜப்பான், 9.பிலிப்பைன்ஸ், 10.ஆஸ்திரேலியா, 11.கம்போடியா, 12.பிஜி 13.ஹாங்காங், 14.மங்கோலியா, 15.குக்தீவுகள், 16.டோங்கா, 17.சமோவா, 18.வனவாட்டு நாடுகளில் உள்ள 71, PSI இணைப்புச் சங்கங்கள் சார்பில் 121 பிரதிநிதிகள்,(delegates) 32 கருத்துடன் கவனிப்பவர்கள்,(Observers) 51 பார்வையாளர்கள்,(Visitors) உட்பட மொத்தம் 204 பேர் கலந்து கொண்டனர்.

மாநாட்டில் தொழிற்சங்கத்திற்கு புதிய வரவான இளம்தொழிலாளர்களை ஒருங்கிணைப்பது, சமவாய்ப்புடன் பொதுத்துறையில் தரமான சேவை, முடிவு எடுக்கும் அதிகாரத்தில் பெண்கள், உள்ளாட்சி மற்றும் சேவைத்துறைகளில் PSI இணைப்பு சங்கங்களை ஒருங்கிணைக்கும் கட்டமைப்பு, சுகாதாரம் மற்றும் சமூகசேவை கட்டமைப்பு, தொழிற்சங்க உரிமை, முதலிய பல்வேறு விஷயங்கள் விவாதிக்கப்பட்டன.

மாநாட்டில் நிலையாணைக்குழு, ( Standing orders Committee ) அறிமுகக்குழு ( Ciedential committee) ஆகிய 2 குழுக்கள் தேர்வு செய்யப்பட்டன. அறிமுகக்குழுவிற்கு கிழக்கு ஆசியாவைச் சேர்ந்த ஆல்டண்ட்செட்செ.ஃக், ஓசியாவைச் சேர்ந்த நிக்கோலஸ் கெல்லி, தென் கிழக்கு ஆசியாவைச் சேர்ந்த இக்பால் ஆஸாம் தன்ராஜ் அப்துல்லா ஆகியோர் உறுப்பினர்களகவும், தெற்கு ஆசியாவைச் சேர்ந்த நமது சங்கப் பொதுச்செயலாளர் R.சந்திர சேகரன் குழுத்தலைவராகவும் தேர்வு செய்யப்பட்டனர். குழுத்தலைவர் என்ற முறையில் பொதுச்செயலாளர், சமர்ப்பித்த அறிக்கை ( நமது சங்க இணையதளத்தில பார்க்கலாம்) மாநாட்டின் ஒட்டுமொத்த வரவேற்பையும் பெற்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

2016-ம் ஆண்டிற்கு உறுப்பினர் சந்தா, இன்னமும் மத்திய சங்கத்திற்கு செலுத்தாத கிளைகள், விரைவில் செலுத்திடுமாறு வேண்டுகிறோம்.

7-ந் தேதி வழங்கப்பட்ட போனஸ் தொகையில் உறுப்பினர்களிடமிருந்து ரூ.500- வசூலித்து ரூ.100- கிளைக்கும், ரூ.100- வட்டத்திற்கும் வைத்துக்கொண்டு, மீதம் ரூ.300- னை மத்திய சங்கத்திற்கும் அனுப்பிடுமாறு வேண்டியிருந்தோம். போனஸ் நன்கொடை வசூல் விறுவிறுப்பாக நடைபெறுவதை அறிந்து மகிழ்ச்சியடைகிறோம்.

இன்று (19-10-2016) வேலூர் வட்டசெயலாளர் திரு.நாராயணன் மற்றும் பொறுப்பாளர்கள், மத்திய சங்க அலுவலகத்திற்கு நேரில் வந்து பொதுச்செயலாளரிடம், வேலூர் வட்டத்தின் சார்பில் வசூல் செய்யப்பட்ட போனஸ் நன்கொடையில், மத்திய சங்கத்தின் பங்கு முதல் தவணையாக ரூ.50,000- வழங்கினார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

கடந்த 27 நாட்களாக உடல் நலக்குறைவால் சென்னை அப்பல்லோ மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வரும் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள் விரைவில் நலம் பெற்று மக்கள் பணியாற்றிட வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

தோழமையுள்ள

பொதுச்செயலாளர்

பெறுநர்.

கிளைச்செயலாளர்கள், கோட்டச்செயலாளர்கள்,
வட்டச்செயலாளர்கள், வட்டத்தலைவர்கள்,
மண்டலச்செயலாளர்கள், மற்றும் மத்திய சங்கப்பொறுப்பாளர்கள்.

நகல்.

செய்திமடல்.